தாமஸ், இங்கு என்னை கவர்ந்த சீனர்களில் இவரும் ஒருவர்.

ரெசிடென்ட் கமிட்டியில் சேர்ந்த முதல் நாள் தான் தாமசைப்பார்த்தேன், என்னை அறிமுகம் செய்து வைக்கும் போது என் கையை இறுக்கமாகப்பிடித்து 'வெல்கம் யங் மேன்' என்றார்.

'யங் மேன்!', நம்மை யாராவது 'நீங்கள் இளமையாக இருக்கிறீர்கள்', என்று சொன்னால் நமக்கு எவ்வளவு சந்தோஷம்!. அப்பொழுது எனக்கு நாற்பத்திமூன்று வயது.

தாமஸ் வெள்ளை நிற சட்டை அணிந்து, அதை ஜீன்ஸ் பாண்டில் டக் இன் செய்து இருந்தார், அவர் கழுத்தில் இருந்த சில்வர் செயினில் சிலுவை இருந்தது, ஸ்போர்ட்ஸ் ஷு அணிந்து இருந்தார், தலை முடி மிலிடரி கட்டிங் செய்து, நேர்த்தியாக இருந்தார்.

ரெசிடென்ட் கமிட்டியின் வேலைகள் முடிந்ததும், நானும், தாமஸும் ஒரு தேனீர் கடையில் உட்கார்ந்து தேனீர் அருந்தினோம். தாமஸ் என்னை சிநேகமாக பார்த்து, "நீ தென் இந்தியாவிலிருந்து வந்துள்ளாய் சரியா?", என்றார்.

"ஆமாம்"

"எப்படி கண்டு பிடித்தேன் என்று கேட்க மாட்டாயா?"

"எப்படி!"

"தென் இந்தியர்கள் பெரும்பாலும் நிறம் குறைவு, வட இந்தியர்கள் பெரும்பாலும் நிறம் அதிகம். நீ, தமிழ் அல்லது கன்னடம் அல்லது தெலுங்கு கண்டிப்பா மலையாளம் இல்லை சரியா!"

“நீங்கள் சொன்னது சரி! நான் தமிழ். நான் தென் இந்தியன் இல்லை, இந்தியாவின் தென் பகுதியில் இருந்து வந்திருக்கும் இந்தியன்”

"நல்லது நல்லது!, அப்படித்தான் சொல்ல வேண்டும், நானும் திருத்திக்கொள்கிறேன்", என்றார்.

"நன்றி!, உங்களுக்கு தமிழ் தெரியுமா?"

"தமிழில், எனக்கு மூன்று வார்த்தைகள் மட்டும் தான் தெரியும்: வணக்கம், நன்றி, பேய்"

"பேய்!, பேய் என்றால் கோஸ்ட்"

"ஆமாம், ஆமாம் எனக்கு தெரியும்" என்று சிரித்தார். சற்று மௌனமாக இருந்து பிறகு தன் பேச்சை தொடர்ந்தார், "உங்களுடைய கலாச்சாரம் எனக்கு ரொம்பப்பிடிக்கும், நான் ராமாயணம் பாதி படித்துள்ளேன், எனக்கு ராமர் தெரியும், அவர் தெய்வீக புருஷர், இருந்தாலும் எனக்கு யானைக்கடவுளைத்தான் மிகவும் பிடிக்கும்......", நிறைய பேசினார்.

"உனக்கு சீனக்கலாச்சாரம் தெரியுமா?", என்றார்.

"உண்மையாகச்சொன்னால் தெரியாது" என்றேன்.

சிரித்தார், "கற்றுக்கொள், அதுவும் சுவாரிசியமானது, நீ கணினி வல்லுனரா?"

"ஆமாம்"

மறுபடியும் சிரித்தார், "சரிதான்!, அப்படி என்றால் உனக்கு கணினியை விட்டா வேற நேரம் கிடைக்காது, உன்னை ஒரு வழி செய்வார்கள், நீ உன்னை பற்றிக்கூட யோசிக்க முடியாது!"....பலமாக சிரித்தார்.

எனக்கு வியப்பாக இருந்தது, இந்த நாட்டிற்கு வந்து ஒரு சீனர் இவ்வளவு எதார்த்தமாக பேச நான் பார்த்தது இது தான் முதல் தடவை.

"நீ கணினியில் என்ன செய்வாய்"

"நிறைய இருக்கின்றன, அதைப்பற்றி சொல்ல அதிக நேரம் பிடிக்கும்"

"எனக்கும் கணினி தெரியும், சொந்தமாக படித்து தெரிந்து கொண்டேன், டிபேஸ் ப்ரோக்ராம்மிங் எழுதுவேன், மேஜை கணினி கூட செய்யத்தெரியும்"

‘இவர் என்ன ரீல் விடுகிறாரா!’, என் சந்தேகக்குணம் அவரை ஊடுருவ ..... அவர் என் கண்ணை பார்த்து பேசினார். இது உண்மையாக இருக்கும் என்று என் முடிவை மாற்றிக்கொண்டேன்.

என் ஆச்சரியத்தை வாங்கிக்கொண்டு, சந்தேகத்தைப்புரிந்து கொண்டு, "நான் உண்மையைத்தான் சொல்கிறேன், ஒரு நாள் என் வீட்டிற்கு வா, நான் செய்த மேஜை கணினியை காட்டுகிறேன்", என்றார்.

"நான் உங்களை நம்புகின்றேன்"

அவர் என் தோளைத்தட்டி "சரி முத்து, என் வயது என்னவென்று சொல்?", என்றார்.

ஒருவர் வயதை கணிப்பதில் நான் தேர்ந்தவன் இல்லை, பெருமையாக சொல்லப்போனால் ஒருவர் செயல்களை மட்டும் பார்ப்பவன், உள்ளிருக்கும் ஆத்மாவை தேடுவதில் கவனம் இருக்குமே ஒழிய வெளியில் இருக்கும் தோற்றத்தைப்பற்றி எனக்கு அவ்வளவு அக்கறையும் இல்லை. வேறு ஒருவர் தோற்றத்தை கேலி செய்யவும் எனக்கு மனம் ஒப்பாது, உடலை கேலி செய்பவர்களை சுத்தமாகப்பிடிக்காது.

“தெரியவில்லை!, அறுபது வயது இருக்குமா மிஸ்டர் தாமஸ்?”

"ஓ!," நிமிர்ந்து உட்கார்ந்தார், தன் விரல் நுனியில் எச்சில் தொட்டு, புருவத்தின் மேல் வைத்து கொண்டார்.

“என்ன சொன்னாய் அறுபதா!, எனக்கு எழுபத்திமூன்று”

என்னால் நிஜமாக நம்ப முடியவில்லை, "ஆனால் உங்களை பார்த்தால் அப்படி தெரியவில்லையே!", என்றேன்.

"நன்றி!, என் மனைவி இறக்கும் தருவாய் வரை என்னை இப்படித்தான் சொன்னாள்"

"மன்னிக்கவும், உங்கள் மனைவி இறந்து விட்டார்களா!"

"அவள் இறந்தாலும், நான் அழைத்தால் வருவாள். முத்து!, என்னை மிஸ்டர் என்று கூப்பிட வேண்டாம், தாமஸ் என்று கூப்பிடு நான் இளமையாக இருக்கின்றேன் என்று இப்போது தானே சொன்னாய்!"

“அவள் இறந்தாலும், நான் அழைத்தால் வருவாள்!”, அவருக்கு தெரிந்த முன்று தமிழ் வார்த்தையில் பேய் இருக்கிறது அது தானோ இது?

"என் காதல் கதை ரொம்ப சிம்பிள் என்று ஆரம்பித்தார்"

'தாமஸ்!, நானும் நிறைய காதல் கதைகளை பார்த்தும், கேட்டும் இருக்கிறேன்', மனதிற்குள் சொல்லிக்கொண்டாலும், தாமஸின் கண்ணில் இருந்த அந்த ஆர்வம், குழந்தைத்தனம், என்னை கதை கேட்கச்சொன்னது.

"அவள் கிறிஸ்துவர், நான் புத்த மதம், அவளுக்காக மதம் மாறினேன், இருந்தாலும் அவள் அண்ணன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை, அவளது அப்பா, அம்மாவிற்கு என்னை பிடித்து இருந்தது. அண்ணன்தான் குடும்பத்தைப்பார்த்து கொள்கிறவன், அவனை எதிர்த்து வந்து என்னைக்கல்யாணம் செய்து கொண்டாள்" என்றார்.

"உங்கள் மனைவியை மிஸ் செய்கிறீர்கள் இல்லையா?"

"ஆமாம் முத்து, ஆனால் நான் அழைத்தால் வருவாள்!", என்றார்

"புரியவில்லையே தாமஸ் எப்படி வருவார்கள்?"

"அது உனக்கு புரியாது முத்து, எனக்கு மட்டும் தான் தெரியும், சரி விடு. எனக்கு ஆரகிள் டேடாபேஸ் சொல்லித்தருகிறயா?", என்றார்.

கணினியின் மிக முக்கியமானவற்றுள், ஆரகிள் டேடாபேஸும் ஒன்று, அதை இந்த வயதில் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டும் இந்த மனிதரை பார்த்து மிக மிக ஆச்சரியப்பட்டுப்போனேன்.

வாரா வாரம் எங்கள் பேச்சும், நட்பும் தொடர்ந்தது, ஆரகிள் டேடாபேஸ் அவருக்கு சற்றென்று விளங்கவில்லை, ஆனால் அதன் செயல்பாடுகளை புரிந்து கொண்டார்.

அவர் வீட்டிற்குச்சென்றேன், வீட்டை மிகவும் சுத்தமாக வைத்து இருந்தார், நிறைய செடி வளர்த்து வந்தார், காலை எழுந்ததும் செடிக்குத்தான் முதல் காலை வணக்கம் சொல்வாராம் பிறகு தன் மனைவியின் புகைப்படத்திற்கு.

அவர் செய்த மேஜை கணினி நன்றாக இருந்தது.

அவரது மகன் தினமும் அமெரிக்காவிலிருந்து போன் செய்வார். மகள், வாரம் ஒரு முறை வந்து பார்த்து கொள்வார்.

"தனியாக எப்படி இருக்கிறீர்கள்?"

"நான் எங்கு தனியாக இருக்கிறேன் முத்து!, இதோ...இந்த செடிகள் இருக்கின்றன, இவற்றிற்கு தண்ணீர் ஊற்றி பார்த்துக்கொண்டும், பேசிக்கொண்டும் இருப்பேன், அப்புறம் வாக்கிங், குளியல், கீழ்க்கடையில் டீ, பிரட் டோஸ்ட், அப்புறம் கணினி, இன்டர்நெட், லைட் லஞ்ச், புத்தகம் படிப்பது, மாலையில் சில நண்பர்களைப்பார்த்து பேசுவேன், அப்புறம் ரெசிடென்ட் கமிட்டி வந்து விடுவேன். வாரக்கடைசியில் பேரப் பிள்ளைகள் என்னை வந்து பார்ப்பார்கள், பள்ளி விடுமுறையில் நான் அவர்களை சென்று பார்த்து வருவேன். அவர்களுக்கு எனக்கு தெரிந்ததை கற்றுத்தருவேன்" என்றார்.

"மனைவியை அழைக்க மாட்டீர்களா!".

சிரித்தார், "அவள் எப்படி வருவாள் என்ற சந்தேகம் உனக்கு இருப்பது எனக்கு தெரியும், அவள் வருவாள் என்றால் ஆவியாக வரமாட்டாள், நினைத்து கொண்டு படுப்பேன் அன்றே கனவில் வருவாள், பேசுவாள்", என்றார்.

"நீங்கள் அழைத்தால் தான் வருவார்களா?"

"அப்படி இல்லை அவளாக வருவாள், அவளாக வந்தாள் நிறைய பேச மாட்டாள்", என்றார்.

சில சமயம் நாங்கள் இருவரும் ரெசிடென்ட் கமிட்டி கூட்டம் முடிந்து நடப்போம். அவர் என்னை விட வேகமாக நடப்பார்.

"முத்து!, என்ன இவ்வளவு மெதுவான நடை? வேகம் வேகம்" என்பார்.

எனக்கு தெரிந்த அளவு அவருக்கு கணினி சொல்லிக்கொடுத்தேன், சில சமயம் போன் செய்து கணினி பற்றி சந்தேகம் கேட்பார்.

கணினி தவிர அவர் நிறைய விஷயங்கள் தெரிந்து வைத்து இருந்தார். அவற்றில் உலகப்போர், திருக்குறள், மலேசியா சிங்கப்பூர் உறவு, இந்திய சுதந்திரம், இன்னும் நிறைய உண்டு.

"ஒரு தடவை உன்னோடு இந்தியா வர வேண்டும்", என்றார்.

"அடுத்த வாரம் போகிறேன் வருகிறீர்களா?"

"ஓ, அப்படியா நான் என் மகனை கேட்க வேண்டும், அடுத்த தடவை வருகிறேன்".

"உங்களுக்கு அங்கு இருந்து என்ன வேண்டும்?", என்று கேட்டேன்.

"நான் வந்து நிறைய வாங்க வேண்டும், நானே வந்து வாங்கி கொள்கிறேன்", என்றார்.

இந்தியா சென்று திரும்பியதும் அவரிடம் தொலைபேசி மூலம் பேசினேன்.

"நீ இல்லாத சமயம் எனக்கு பக்க வாதம் போல் வந்தது, அம்புலன்சில் கூட்டிப்போனார்கள், நான் நன்றாக இருக்கிறேன் என்று சொன்னாலும் நம்ப வில்லை, இடது பக்கம் கொஞ்ச நேரம் மரத்துப்போனது அப்புறம் சரியாகி விட்டது", என்றார்.

மிகவும் கவலையாக இருந்தது, நேரில் சென்று அவரைச்சந்தித்தேன்.

வீட்டில் அமர்ந்து தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு இருந்தார், "முத்து!, வா, வா எப்படி இருக்கிறாய்?”

“நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் தாமஸ்?”

"நான் எப்போதும் நன்றாக இருப்பேன், என் பிள்ளைகள்தான் என்னை பயமுறுத்தி விட்டார்கள்" என்றார், பிறகு லேசாக சிரித்தார்.

"நான் என் மனைவியை மிகவும் நேசிக்கிறேன், அவள்தான் என் இரண்டு பிள்ளைகளையும் பார்த்துக்கொள்ள சொன்னாள், அவள் கூப்பிட்டால் நான் போவேன் அது வரை போக மாட்டேன்", மீண்டும் கண்ணடித்துச்சிரித்தார்.

"உடம்பை பார்த்து கொள்ளுங்கள் எதாவது உதவி தேவை என்றால் தயங்காமல் என்னை கூப்பிடுங்கள்" என்றேன்.

"கவலை வேண்டாம்" என்றார்.

வேலை காரணமாக, அடுத்த இரண்டு வாரம் மலேசியா போக வேண்டி வந்தது, ப்ரொஜெக்ட் வேலையில் ஆழ்ந்து இருந்து விட்டேன்.

சிங்கைக்கு வந்ததும் தாமசிற்கு போன் செய்தேன், போன் ஆப் செய்யப்பட்டு இருந்தது, அதே நாள் மாலையில், ரெசிடென்ட் கமிட்டி செயலாளர் சாராஹ்விடமிருந்து குறுஞ்செய்தி வந்தது.....”தாமஸ் வேக் டுமாரொவ்”.

மிகவும் அதிர்ந்து போனேன்.

"என்ன சாராஹ்!, என்னை கூப்பிட்டு இருக்கலாமே?"

"உனக்கு குறுஞ்செய்தி அனுப்பி இருந்தேனே முத்து!"

குறுஞ்செய்தி எதற்கு அனுப்புவது எதற்கு அனுப்பக்கூடாது என்று தெரியாத அளவிற்கு நாம் இருக்கின்றோம்.

"அவர் நன்றாகத்தானே இருந்தார்!, என்ன ஆச்சு"

“அவர் மகளுக்கு போன் செய்து உன் அம்மா கூப்பிடுகிறாள் என்று சொன்னாராம், வெளியே வந்து செடிக்கு குட்பை சொன்னாராம், அப்போது பக்கத்து வீட்டுக்காரார் குட்மார்னிங் இல்லையா என்று கேட்க, இவர் இனி குட்மார்னிங் இல்லை என்று சொல்லி இருக்கிறார். அன்று மாலை வரை அவர் வீட்டை விட்டு வரவில்லை, போன் தொடர்ந்து ரிங் போக, பிறகு மகள் வந்து மாற்றுச்சாவி வைத்து வீட்டை திறந்து பார்த்தால், உடல் மட்டும் தான் இருந்து இருக்கிறது.”

நான் போன போது அவர் மகள் என்னிடம் வந்து பேசினார்கள், “நீ முத்துவாக இருக்க வேண்டும் சரியா!”.

"ஆம் நான்தான் முத்து"

"என் அப்பாவின் ஒரே இந்திய நண்பன்!, அவ்வப்போது உன்னை பற்றிச்சொல்வார், அவருக்கு யாரையும் சற்றென்று பிடிக்காது, உன்னை பிடித்தது மிகவும் ஆச்சரியம்".

"கடைசியாக எதாவது சொன்னாரா, அவர் ஆசை, விருப்பம் ...."

"அப்படி எதுவும் சொல்லவில்லை, உன் அம்மா கூப்பிட்டாள்", என்று மட்டும் கூறினார்.

சவப்பெட்டி மேல் இரண்டு கதவுகள் இருந்தது, முகம் இருக்கும் பக்கம் கதவு மட்டும் திறந்து இருந்தது, அவருடைய சிறு வயது புகைப்படத்தை அருகே வைத்து இருந்தார்கள்.

அருகில் சென்று அவர் முகத்தை பார்ப்பதற்கு ஏனோ எனக்கு மனம் வரவில்லை, பயம் இல்லை, ஆனால் ஏதோ ஒரு நெருடல். கண்ணில் கண்ணீர் இல்லை, ஆனால் மனம் முழுவதும் சோகம். அவரின் படத்தை பார்த்துக்கொண்டே இருந்தேன்.

கொஞ்ச நேரம் கழித்து அவர் வீட்டிற்குச்சென்றேன், அவர் வீட்டின் முன்னால் இருந்த செடிகளை காணவில்லை.

கீழே வந்து அவர் மகளிடம் கேட்டேன், "ஓ அதுவா அவர் இறந்த மறு நாளே செடிகள் எல்லாம் வாடி விட்டது, தண்ணீர் ஊற்றிப்பார்ப்பதற்கு ஆள் இல்லை, எல்லாவற்றையும் கொண்டு போய் கார்டனில் போட்டு விட்டேன்" என்றார்.

இறுதிச்சடங்கில் நான் கலந்து கொள்ளவில்லை. இரண்டு நாள் கழித்து எனக்கு தொலைபேசி மூலம் ஓர் அழைப்பு வந்தது,

"முத்து"

"எஸ்"

"நான் தாமசின் மகன், அப்பா உங்களோடு இந்தியா வருவதாக இருந்தது ஆனால் முடியாமல் போய் விட்டது, உங்களுக்கு நான் வரும்போது நினைவு பொருள் ஒன்று வாங்கி வரச்சொன்னார், மிகவும் விலை உயர்ந்த பொருளாக இருக்க வேண்டும் என்றும் சொன்னார். மொன்ட் ப்லங்க் பேனா ஒன்று வாங்கி வந்தேன், தப்பாக நினைக்கவில்லை என்றால் என் தங்கையின் வீட்டிற்கு வந்து வாங்கி கொள்கிறார்களா?".

"ஷூர் வரேன்!", என்று சொல்லி இரண்டு வருடத்திற்கு மேல் ஆகிறது, நான் இன்னும் அவரின் மகள் வீட்டிற்குச்சென்று அந்தப்பேனாவை வாங்கிக்கொள்ளவில்லை.

அவரின் மகன் இப்பொழுதும் என் மீது வருத்தம் கொண்டிருக்கலாம், ஆனால் தாமஸின் மகள் தூக்கி எறிந்த செடிகள் மட்டும் இப்பொழுதும் என் வீட்டு வாசலில் என்னை தினமும் பார்த்து புன்னகைத்துக்கொண்டு இருக்கிறது.

(சொற்கள் எண்ணிக்கை: 1245)